### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47ஆம் பந்தியின் பிரகாரம், முன்னைய காலப்பகுதிக்குரிய பொருண்மையான தவறுகள், அவை கண்டறியப்பட்ட பின்னர் வெளியிடுவதற்காக அங்கீகரிக்கப்படும் முதலாவது நிதிக்கூற்றுக்களின் தொகுதியில் தவறு இடம்பெற்ற காலப்பகுதிக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு | 2020ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இந்த தவறுகள் திருத்தப்படும் என்பது. | நியமத்தின் பிரகாரம் செயற்பட்டு, இந்த தவறினை திருத்தி 2020ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிகளை மீள பிரசுரிப்பதன் மூலம் முன்னேக்கியதாக திருத்தம் செய்ய வேண்டியதுடன், அவ்வாறல்லாது முன்னைய ஆண்டுக்குரிய சீராக்கங்களாக ரூபா 2.75 மில்லியன் 2019 சனவரி 01ஆந் திகதயில் உள்ளபடியாக முன்கொண்டுவரப்பட்ட திரண்ட பற்றாக்குறைக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 21ஆம் பந்தியின் பிரகாரம், கட்டிடங்கள் மற்றும் ஆதனங்களை பேணிச் செல்லும் போது மேற்கொள்ளப்படும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினய் மீண்டெழும் செலவினமாக வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட வேண்டிய போதிலும், கட்டிடங்களின் பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 7.11 மில்லியனான மீண்டெழும் தன்மையிலான செலவினம் மூலதனமாக்கப்பட்டமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை அந்த அளவினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டிடங்களின் பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்டிருந்த சில செலவினங்களை, மூலதன் செலவினங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு நிதியேற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமைய ால் சொத்தின் கிரயம் அதிகரித்தமை, அதன் நிலைத்த தன்மை 3 முதல் 5 வருடங்களை விஞ்சியிருந்தமை போன்ற காரணங்களால் மூலதன செலவினமாக இனங்காணப்பட்டது என்பது. | - மேற்படி - |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 43ஆம் பந்தியின் பிரகாரம், ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் உரிய தொழிற்தகைமையுடைய மதிப்பீட்டாளர் ஒருவரை கொண்டு சொத்துக்களை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அங்கீகரிக்கப்பட்ட தொழிற்தகைமையற்ற மதிப்பீட்டாளர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 5 வாகனங்களின் பெறுமதி ரூபா 32.60 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாததாக காணப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் தொழிற்தகைமையுடைய மதிப்பீட்டாளர் ஒருவரை கொண்டு சொத்துக்களை மதிப்பீடு செய்து, 2020ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை திருத்தம் செய்வதாக. | - மேற்படி - |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்படு ஆயட்காலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படாமையால், ரூபா 134.38 மில்லியனான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு | நியமத்தின் பிரகாரம், முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான அறிக்கையொன்றை தயாரித்து, அவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்காக சுகாதார அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தர் (பொருள் மெய்மையாய்வு) இற்கு அனுப்பப்பட்டதாகவும், அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்கள் | நியமத்தின் பிரகாரம் செயற்பட்டு, இந்த தவறினை திருத்தி 2020ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நியம இலக்கம் 3 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தற்காலிகமாக செயலிழந்துள்ள, பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த மற்றும் கைத்தவிர்ப்பதற்குள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை இனங்கண்டு நியாயப் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை. |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் சுகாதார அமைச்சிடமிருந்து வெகுமதியாக கிடைத்திருந்த ரூபா 8.5 மில்லியன் கிரயமாக பிணியாளர் காவும் வண்டியின் பெறுமதியை, வெகுமதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்குப் பதிலாக, மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | இந்த தவறு திருத்தப்பட்டு, 2020ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் என்பது. | இந்த தவறு திருத்தப்பட்டு, 2020ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2010ஆம் ஆண்டு முதல் வெகுமதியாக கிடைத்திருந்த ரூபா 14.38 மில்லியன் கிரயமான நிலையான சொத்துக்களில் கடந்த 9 வருடங்களின் மற்றும் மீளாய்வாண்டின் காலக்கழிவு பெறுமதி ரூபா 8.25 மில்லியன் ஆன போதிலும், குறித்த காலக்கழிவு சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிராததுடன், ஏனைய மூலதன நன்கொடைகளுக்குரிய மீளாய்வாண்டின் காலக்கழிவு ரூபா 5,858,840 இனால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக சொத்துக்களின் பெறுமதி மற்றும் ஒதுக்கங்களின் அளவானது அந்த பெறுமதியால் கூட்டி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான 02 அறுவைச்சிகிச்சை உபகரணங்களின் கிரயம் ரூபா 1.4 மில்லியனால் மற்றும் 08 இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின உருப்படிகளின் கிரயம் ரூபா 287,188 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1999 இன் 38ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) 3.1ஆம் உப பிரிவின் (iii) பந்தி | விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள மருத்துவ தொழிலில் ஈடுபடுவோரால் அவர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் நபரொருவர் வைத்தியசாலைச் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருக்கப்பட வில்லை. | மருத்துவ பதவியணியின் அனைவரினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மருத்துவமனையின் பணிப்பாளரை இந்த சபையின் பணிப்பாளராக் நியமிப்பதற்கு சுகாதார அமைச்சிற்கு அனுப்பிவைத்த போதிலும், இமைச்சினால் இந்த நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) 3(3) மற்றும் 3(4) உப பிரிவுகள் | வைத்தியசாலைச் சபையின் பதிற்கடமை தலைவர் குறித்த அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக பணிப்பாளர் சபையின் முன்மொழிவின் அடிப்படையில் பதிற்கடமை தலைவரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். 2018 ஆகஸ்ட் 20 முதல் 2020 சனவரி 29ஆந் திகதி வரையிலும் முறையான நியமனமொன்று இல்லாது பதிற்கடமை தலைவராக கடமையாற்றியிருந்தார். | தற்போது முறையாக தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள மை. | முறையற்ற நியமனமொனன்றை மேற்கொண்டு, வழங்கப்பட்டுள்ள வரப்பிரசாதங்களுக்கு உரிய நிதிப் பெறுமதி பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 5.1ஆம் உப பிரிவு | வைத்தியசாலைச் சபையின் கூட்டங்கள் மாதத்திற்கு ஒரு தடவையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2019ஆம் ஆண்டினுள் 5 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | கூட்டங்களை நடாத்துவதற்கான திகதியினை நிர்ணயித்தல் தலைவரின் அதிகாரத்திற்குட்பட்டது என்பது மற்றும் 2021ஆம் ஆண்டின் போது மாதாந்த கூட்டத்தினை நடடாத்துவதன் தேவைப்பாடு தொடடர்பில் அவர் அறிவித்திருந்ததார் என்பது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iv) | 7ஆம் பிரிவு | வைத்தியசாலைச் சபையின் அதிகாரச்சட்டத்தின் பட்டோலையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள சீதுவையில் அமைந்துள்ள காணியின் உரித்து 2020 ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலும் வைத்தியசாலைச் சபைக்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விஜய குமாரதுங்க மன்றத்திற்கு புறம்பாக சிலோன் அக்ரோ நிறுவனத்திற்க சொந்தமான காணியொன்றும் காணப்படுகின்றமையால், சிலோன் அக்ரோ நிறுவனத்திடம் கோரி ஆரம்ப இடத்தின் வரைபடங்களை சபையிலிருந்து பெற்றுக்கொண்ட பின்னர் தனியானதொரு வரைபடத்தினை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அதிகாரசசட்டத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைச் சபையின் உரித்தினை சபைக்கு சுவீகரித்தல் துரிதமாக இடம்பெற வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 225(1), 245(1) மற்றும் 257 | அனைத்து கொடுப்பனவுகளுக்கும் உரிய மாதிரிப் படிவங்கள் உரிய முறையிலும், முழுமையாகவும் நிரப்பப்பட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளை சான்றுபடுத்தும் உத்தியோகத்தரால் சான்றுபடுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியதுடன், | தற்போது சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள கணக்காளரினால் சான்றுபடுத்தப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மற்றும் எதிர்காலத்தில இவ்வாறான தவறுகள் இடம்பெறுதல் | சான்றுபடுத்தப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சான்றுபடுத்தப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளல் அதிகாரமற்ற கொடுப்பனவாக கருதப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், மீளாய்வாண்டினுள் சான்றுபடுத்தப்படாத 138 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக செலுத்தப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 19.27 மில்லியன் ஆகும். நிதிப் பிரமாணம் 257 இன் பிரகாரம், அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அந்த பணித்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவிர்க்கப்படும் என்பது. | |
| (இ) | 1998 திசெம்பர் 30ஆந் திகதிய 29/98ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1.1 அல்லது 3.2.1 மற்றும் 3.1.3 அல்லது 3.1.4 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் 3.1.1ஆம் பந்தியில் அல்லது 3.2.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அந்த தகைமைகளுக்கு மேலதிகமாக 3.1.3 ஆம் பந்தி அல்லது 3.1.4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிராத போது 23 உத்தியோகத்தர்களுக்கு 2019 சனவரி முதல் 2020 மார்ச் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய மொழித் தேர்ச்சிக்கான கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 343,792 ஆகும். | 23 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட மொழிக் கொடுப்பனவு 2020 யூலை மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டமை, சுற்றறிக்கை முரண்பாடுகளின் அடிப்படையில் அந்த கொடுப்பனவுகள் இடம்பெற்றுள்ளமையால் அதனை திருத்துவதற்காக புதிய சுகாதார செயலாளரால் பரிந்துரை செய்யப்பட்ட அறிக்கையொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது என்பது. | கொடுப்பனவை பெற்றோர் அல்லது சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய தகைமைகளை பூர்த்தி செய்திராத உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்ட பணம் மீள அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்கள்த்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை . | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2010 திசெம்பர் 14ஆந் திகதிய 55ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஆகக் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடைவ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு குழுக் கூட்டங்கள 02 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) மற்றும் (ஆ) வழிகாட்டிகள் | மீளாய்வாண்டிற்கான பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில் லை. | தற்போது வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்படுகின்ற து என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், தேவைக்கமைய அது வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதிப் விளைவுகள்

------------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 63.51 மில்லியன் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 45.73 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 109.24 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரச மானியங்கள் ரூபா 28.42 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் ஆண்டிற்கான செலவினம் ரூபா 83.38 மில்லியனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வாட்டுத் தொகுதிக்கான கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 256 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் நிர்மாணங்களை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அத் திகதி வரையிலும் ஒப்பந்தம் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | சுகாதார அமைச்சின் பெறுகைகள் குழுவினால் அனைத்து பெறுகை நடவடிக்கைகளையும் நிறைவு செய்டு அமைச்சரவை பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பித்த பின்னர் ஆட்சிக்கு வந்த புதிய அரசினால் எதிர்வரும் 2 வருட காலத்திற்காக அனைத்து செயற்திட்டங்கள் மற்றும் புதிய செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டமையால், இந்த செயற்திட்டமும் இடைநிறுத்தப்பட்டமையால் அந்த பெறுகை பணிகள் தொடர்பான முழுமையான பொறுப்பு சுகாதார அமைச்சிற்குரியது என்பது. | ஒதுக்கப்பட்ட நிதியை உச்சமாக பயன்படுத்தல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு நிர்மாணங்களை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) மீளாய்வாண்டிற்கு முன்னர் ரூபா 136,859 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 208 பொருள் விடயங்களின் அலகுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 426,071இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 25,092 பொருள் உருப்படிகளில் அலகொன்றேனும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மருத்துவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லல் மற்றும் அதற்கு சமனாக சிகிச்சை முறைகளை மாற்றியமைத்து மாற்று மருந்துகளை பயன்படுத்தல், எதிர்பார்த்த விதத்தில் நோயளர்களின் வருகையின்மை மற்றும் சில மருந்துகள் மெதுவாக பயன்படுத்தப்படல் ஆகியன மருந்துப் பொருள் இருப்பு பயன்படுத்தப்படாமைக்கு காரணமாக அமைந்துள்ளமை. | காலாவதியாவதற்கு முன்னர் மருந்து வழங்கல் பொருட்களை பயன்பாட்டிற்குளடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பல் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயளர்களின் குறைவானது 23.6 சதவீதம் ஆகும். அவ்வாறே வாட்டு இலக்கம் 1 மற்றும் 2 இல் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் வீழ்ச்சியானது கடந்த வருடத்திற்கு ஒப்பாக முறையே 24 சதவீதம் மற்றும் 31 சதவீதம் ஆகும். மேலும், லேசர் சிகிச்சைகளிலான குறைவானது கடந்த வருடத்திற்கு ஒப்பாக 40 சதவீதம் ஆகும். | மருத்துவமனைக்கு நோயளர்கள் வருகைதரல் அவர்களின் தேவையின் அடிப்படையில் தங்கியுள்ளது என்பது. மருத்துவமனைக்கு வருகைதரும் நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன், நோயாளர்களின் எண்ணிக்கையிலான குறைவானது சிகிச்சையின் வெற்றியாக கருதப்படும் என்பது. | நோய் நிவாரண நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டமையால் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது சான்றுபடுத்தப்பட வேண்டும். நோய் நிவாரண நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் அதிகளவு நோயளர்களுக்கு சேவையினை வழங்குவதற்கு மருத்துவமனையின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டினுள் வைத்தியசாலைச் சபையின் சுத்திகரிப்பு சேவையினை பெற்றுக்கொள்வதிலான பெறுகையின் போது, அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.3 மற்றும் 4.3.1 ஆம் வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 7.9.11 வழிகாட்டியின் பிரகாரம் குறைந்த விலையில் பணிகளை நிறைவேற்றும் விதம் தொடர்பில் விலைக்கேள்வியாளர்களிடம் விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பணி பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் அறிக்கைகள் மருத்துவமனையின் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் காணப்படவில்லை. | இரசாயன பொருட்களின் நியமம் தொடர்பில் மிகவும் கவனத்துடன் செயற்படுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.<br><br>விலைக்கேள்வியாளர்களை தெரிவு செய்தல் மருத்துவமனைக்கு பொருளாதார ரீதியில் நலனளிக்கும் வகையில் இடம்பெற்றுள்ளமை,<br><br>அனைத்து ஊழியர்கள் மற்றும் வேலை பரிசோதகர்கள் சேவைக்கு வருகைதரல் மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்வதற்காக கையெழுத்து பதிவேடொன்று பேணப்பட்டுள்ளமை, அந்த பதிவேடு நாளாந்தம் நிர்வாக உத்தியோகத்தர் அல்லது மற்றுமொரு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் பெறுகைகள் குழுக் கூட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும்.<br><br>விலைக்கேள்வி ஆவணங்களின் பொதுவான நிபந்தனைகளின் பிரகாரம் கிருமிநீக்கும் திரவங்கள் உரிய நியமத்தின் அடிப்படையில் காணப்படுகின்றதா என்பது மற்றும் விலைகள் சந்தை விலைகளுடன் ஒப்பிடும் போது நியாயமானதா என்பது, மற்றும் நடைமுறைக்கு சாத்தியமானதா என்பதை விலைக்கேள்வி மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட இரசாயன பொருட்களின் தரம் தொடர்பில் சான்றிதழொன்று இல்லாது ஒப்பந்ததாரருக்கு மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 9.22 மில்லியன் ஆகும். சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கைக்கு முரணாக 24 மணித்தியாலங்களுக்கு மேலாக ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 38 சந்தர்ப்பங்களும், ஊழியர்கள் குறைவாக ஈடுபடுத்தப்பட்ட 154 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | உத்தியோகத்தரால் இரவு நேர கடமைக்குப் பொறுப்பான தாதியர் உத்தியோகத்தரால் பரிசோதித்து கையொப்பமிடப்படுவதாக,<br><br>24 மணித்தியாலங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையின் பிரகாரம் பட்டியல்களில் அந்த கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளமை. | செய்யும் போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.<br><br>அனைத்து விலைக்கேள்வியாளர்களினதும் கூறுவிலைகள் தொடர்பில் விரிவான மதிப்பீடொன்றை மேற்கொண்டு சாதகமான முறையில் பதிலளிக்கும் ஆகக் குறைந்த விலையை தெரிவு செய்ய வேண்டும்.<br><br>விலைக்கேள்வி மதிப்பீடு செய்யும் தாக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு கவனம் செலுத்த வேண்டும்.<br><br>சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பணி பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் அறிக்கைகள் நாளாந்தம் பரிசோதிக்கப்பட்டு சரியானது என கையொப்பமிடுவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவருக்கு சாட்டுதல் செய்யப்பட வேண்டும்.<br><br>சுத்திகரிப்பு ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரிவுகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர் செயற்படுகின்றாரா என்பது தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வைத்தியசாலைச் சபையின் முற்புற வீதியில் தாரிடுதல் மற்றும் வெளிவாரி நோயாளர் பிரிவுகளின் அறைகளை ஒதுக்குதல் ஆகிய இரு பணிகளுக்காக திறந்த போட்டி அடிப்படையிலான கேள்வி முறையின் கீழ் தெரிவு | பெறுகைகள் குழுவின் தலைவராக மருத்துவமனையின் பணிப்பாளர் செயற்படுகின்றமையால், மருத்துவமனைப் பணிப்பாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதி | அனைத்து ஒப்பந்தங்கள் தொடர்பிலும் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செயற்படாமையால் ஏற்பட்ட நட்டத்தினை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்களுக்கு முறையே ரூபா 3.26 மில்லியன் மற்றும் ரூபா 1.53 மில்லியனான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த ஒப்பந்தங்களை கையளிக்கும் போது வேறுபாடுகள் காணப்படும் விலைக்கேள்விகள் கருத்திற்கொள்ளப்படாது மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளுமாறு மருத்துவமனையின் பணிப்பாளரினால் ஆலோசகருக்கு தெரிவிக்கப்பட்டிருந்த காரணத்தால்மதியுரை நிறுவனத்தினால் ஆகக் குறைந்த விலைக்கேள்வியை சமர்ப்பித்த நிறுவனத்தை புறக்கணித்து மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் இரு ஒப்பந்தங்களிலும் ரூபா 476,849 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டமை. | அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 2.93 மில்லியன் செலவிடப்பட்டு உணர்வு இழப்பு இயந்திரமொன்றினை கொள்வனவு செய்யும் பெறுகையின் போது இயந்திரத்தின் அமைப்புக் குறிப்பீடுகள் மற்றும் ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்கு இணங்குகின்றமை, விலைக்கேள்வி நிபந்தனைகளுக்கமைய இயந்திரம் கிடைத்துள்ளமை, விநியோகிக்கப்பட்ட இயந்திரத்தினை பொருத்துதல் உரிய முறையில் இடம்பெற்றுள்ளமை, உதிரிப்பாகங்கள் கிடைத்துள்ளமை, இயந்திரத்தின் உத்தரவாத சான்றிதழ் மற்றும் கையேடு கிடைத்துள்ளமை, விசேட பயிற்சி மற்றும் பயன்படுத்துவதற்குரிய அறிவுரைகள் மற்றும் விபரங்கள் இயந்திரத்தினை பயன்படுத்தும் உத்தியோகத்தருக்கு (End User) வழங்கப்பட்டமை, | இது சிறந்த நிலையில் இயங்குகின்றமையும், கோரப்பட்டுள்ள அமைப்புக்குறிப்பீடுகளுக்கமைய விநியோகிக்கப்பட்டுள்ளமையும் தொடர்பில் அறுவைச் சிகிச்சை நிபுணரினால் கையொப்பமிடப்பட்டுள்ளமை , இயந்திரத்தின் உத்தரவாதச் சான்றிதழை உறுதிப்படுத்தும் ஆவணம் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளமை மற்றும் கெட்லொக், மெனுவல் அறுவைச் சிகிச்சைக்கூடத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ளமை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் இயந்திரத்தினை இறுதியாக பயன்படுத்துவோர் அல்லது உயிரியல் மருத்துவ பொறியியலாளரிடம் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொருத்தப்பட்ட பின்னர் இயந்திரம் உரிய முறையில் இயங்குகின்றமையை உறுதிப்படுத்தல் மற்றும் தேவையான கெட்லொக், மெனுவல், அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியன வழங்கப்பட்டமைக்காக உயிரியல் மருத்துவ பொறியியலாளரினால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரித்தற்ற பதவியொன்றான சிறுவர் நோயியல் நிபுணர் (Consultant Pediatrician) பதவிக்காக வருகையின் அடிப்படையில் (Visiting Basis) கடந்த 4 வருட காலப்பகுதியினுள் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டினுள் இந்த பிணியாய்வில் பங்குபற்றிய நோயளிகளின் எண்ணிக்கையில் 41 சதவீதமான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. | நோயாளர்களுக்கான பிணியாய்வுகளுக்கு இந்த மருத்துவர் வருகைத்தருகின்ற போதிலும், நோயளர்களின் எண்ணிக்கை குறைவடைதல் மருத்துவமனையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயம் என்பது. | கடந்த 4 வருடங்களாக நோயாளர்களின் எண்ணிக்கை கிரமமாக குறைவடைந்தமை தொடரடபில் முகாமைத்துவம் கவனம் செலுத்தி தீர்மானம் எடுக்க வேண்டும். |
| (ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி, வைத்தியசாலைச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்படாத பணிப்பாயர் சபையின் செயலாளர் எனும் பெயரில் பதிவயொன்று ஏற்படுத்தப்பட்டு, அந்த பதவியில் | வைத்தியசாலை சபை அதிகாரச்சட்டத்தின் அதிகாரங்களின் பிரகாரமத், பணிப்பாளர் சபைக்குரிய கட்டுப்பாட்டு அதிகாரங்களுக்கமைய பணிப்பாளர் சபையின் செயலாளரின் பணிக்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக மற்றும் குறித்த | மருத்துவமனையின் புதிய பதவிகளை உருவாக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். மருத்துவமனையால் குறித்த பதவிக்குரிய பணிப்பொறுப்கள் திட்டவட்டமாக இனங்காணப்பட |

உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். திட்டவட்டமான பணிக் கையளிப்பொன்று இடம்பெற்றிராததுடன், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மாதாந்தம் ரூபா 30,000 ஆன கொடுப்பனவொன்று மற்றும் ரூபா 5,000 போக்குவரத்துப் படியும் செலுத்தப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 01ஆந் திகதி முதல் 2019 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 442,000 ஆகும். மேலும், மருத்துவமனை வளாகத்திற்கு புறம்பான இடமொன்றில் இந்த நபரின் அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்காக ரூபா 172,709 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

இணைப்பு பணிகளுக்கு பொருத்தமான நபரொருவர் 2018 ஒக்தோபர் 03ஆந் திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டு ரூபா 30,000 ஆன மாதாந்த கொடுப்பனவொன்றை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை, கொழும்பு நிதஹஸ் மாவத்தையில் அமைந்துள்ள தலைவரின் அலுவலகத்தில் இந்த உத்தியோகத்தர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அலுவலக உபகரணங்கள் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பது.

வேண்டியதுடன், அது கண்காணிப்பு உத்தியோகத்தர் ஒருவரின் பணிக் கையளிப்புக்கு உட்பட வேண்டும்.

அவ்வதறு இடம்பெறாத நியமனங்களுக்காக அரச நிதியத்தில் கொடுப்பனவுகளை செலுத்துதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதுடன், வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் மீண்டும் மருத்துவமனைக்கு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.